**தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 22 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்கு**

---

**2.1 ஒதுக்கீட்டுக்கணக்கு**

---

**(அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

---

மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 758.00 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 601.42 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 156.58 மில்லியன் அல்லது 21 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 543.70 | 538.21 | 5.48 | 01 |
| மூலதனம் | 214.30 | 63.20 | 151.10 | 70 |
| மொத்தம் | 758.00 | 601.41 | 156.58 | 21 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 23 அமைச்சுக்கள் மற்றும் 18 திணைக்களங்களினால் ரூபா 1,802.79 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து முறையே ரூபா 1,652.95 மில்லியன் தொகையும் ரூபா 92.03 மில்லியன் தொகையுமாக ரூபா 1,744.98 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 55.80 மில்லியன் தொகையும் ரூபா 2.01 மில்லியன் தொகையுமாக ரூபா 57.81 மில்லியன் தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இச் சேமிப்பு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் முறையே 3 சதவீதமாகவும் 2 சதவீதமாகவும் காணப்பட்டது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 269011 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 36.58 | 31.326 | 18.00 | 27.62 | 100.00 | 94.83 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

-----------------------------

மாவட்டச் செயலகத்தின் 7002/0000/00/0287/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 45,000 மீதி காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

------------------------------

மாவட்டச் செயலகத்திற்கும் 14 பிரதேச செயலகங்களிற்கும் உரித்தாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 84,555,167 ஆக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0000/00/0015/0000/000 | 563,838 |
| 6000/0000/00/0001/0074/000 | 2,429,973 |
| 6000/0000/00/0002/0098/000 | 13,000 |
| 6000/0000/00/0013/0066/000 | 2,167,977 |
| 6000/0000/00/0014/0010/000 | 11,067 |
| 6000/0000/00/0016/0049/000 | 79,245,598 |
| 6000/0000/00/0017/0017/000 | 122,414 |
| 6000/0000/00/0018/0058/000 | 1,300 |
| **மொத்தம்** | **84,555,167** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

------------------------------------

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள்

--------------------------------------------------------------------------------

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

----------------------------------------------------------

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அடியிதழ் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதிய கட்டிட நிர்மாணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 150,000,000 தொகையான ஏற்பாடு முழுவதும் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தாது சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 மீண்டுவரும் செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 11,339,000 மொத்த தொகையில் ரூபா 2,921,453 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 03 மீண்டுவரும் செலவின விடயங்களிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 122,600,000 தொகைக்கு மேலதிகமாக குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமாக ரூபா 119,300,000 தொகை பெறப்பட்டிருந்தது.

(ஈ) 07 மீண்டுவரும் செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 113,550,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாட்டில் 18 சதவீதமான ரூபா 20,570,000 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவின விடயங்களிற்காக மாற்றப்பட்டிருந்தது.

### 3.2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு

மாவட்டச் செயலகத்திற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடமிருந்து அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 124,084,039 தொகை மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்தும் அதில் ரூபா 103,475,473 தொகை அல்லது 83 சதவீதம் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதி வரையில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.3 கட்டுநிதிக் கணக்குகள்

-----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம், செயல் நிமித்த உப கட்டுநிதிகள் அது வழங்கப்பட்ட தேவை பூர்த்தியாக்கப்பட்ட உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 03 நபர்களுக்கு மூன்று சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 25,903 தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதிகள் 83 முதல் 150 நாட்கள் வீச்சிலான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிப்பிரமாணம் 373 இன் பிரகாரம், திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திறைசேரிக்கு மீளளிக்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதியான ரூபா 45,000 தொகை 2016 பெப்ரவரி 11 ஆந் திகதி அதாவது 42 நாட்களுக்கு பின்பே மீளளிக்கப்பட்டிருந்தது.

## 3.4 பொது வைப்புக் கணக்கு

-----------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

காணி உரிமையாளர் ஒருவருக்கு இழப்பீடு வழங்குவதற்காக 2009 ஏப்ரல் 29 ஆந் திகதி கோரளைப்பற்று பிரதேச செயலகத்தினால் ரூபா 81,439 பெறப்பட்டிருந்த போதிலும் அத் தொகையினை உரிமையாளரிற்கு வழங்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-----------------------------------------------

### 3.5.1 உள்ளகக் கணக்காய்வு

------------------------------

மாவட்டச் செயலகத்தினால் உள்ளக கணக்காய்வுப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு ஒரு பிரதம உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரும் 33 உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மாவட்டச் செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் முக்கிய விடயங்கள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு முழு அளவில் இடம்பெற்றிருக்கவில்லை.

- ஒப்பந்த நிர்வாகம்
- சொத்து முகாமைத்துவம்
- வாகனப் பராமரிப்பு
- முற்பண வழங்கல்கள்
- பௌதீக செயலாற்றல்கள்

**3.5.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2006 மார்ச் 26 ஆந் திகதிய எச்ஏ/டிஏ/12/27 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், சகல பிரதேச செயலாளர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோக பூர்வ விடுதியில் கட்டாயம் குடியிருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் போரதீவுப்பற்று பிரதேச செயலாளரிற்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுதியில் பிரதேச செயலாளர் குடியிருக்காமல் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தரகள் பயன்படுத்துவதற்காக 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், இவ் உத்தியோகபூர்வ விடுதியினை மீளப் பெற்று பிரதேச செயலாளர் குடியிருப்பதற்கு இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ii) மட்டக்களப்பு கிறீன் வீதியில் அமைந்துள்ள மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான இரண்டு உத்தியோகபூர்வ விடுதிகளில் 2008 ஆம் ஆண்டிலிருந்து வெளிநபர்கள் வசித்து வருகின்ற போதிலும் அவ்விடுதிகளை மீளப்பெறுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

நோறாட் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்த மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான கட்டிடத்திற்காக மட்டக்களப்பு மாநகர சபைக்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து 2013 வரை செலுத்த வேண்டிய ரூபா 190,668 தொகையான ஆதன வரி இற்றைவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 | 898,092 | போரதீவுப்பற்று மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச செயலகங்களிற்கு சொந்தமான 03 வாகனங்கள் 2011, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் விபத்திற்குள்ளாகி ரூபா 898,092 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும் பிரமாண ஏற்பாடுகளுக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2009 திசெம்பர் 22 ஆந் திகதிய எச்ஏஜீஎன்/4/2/1 பொது ஆம் இலக்க மற்றும் 1999 ஏப்ரல் 09 ஆந் திகதிய 1/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | மாவட்டச் செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களின் 251 கிராம உத்தியோகத்தர்கள், 36 சாரதிகள் மற்றும் 81 ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 செயற்திட்ட அமுலாக்கலின் நலிவுகள்

மாவட்டச் செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சின் நூறு நாள் விஷேட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் பேருந்து நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மாவட்டச் செயலகத்தினால் ரூபா 10,577,086 பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- ஒப்பந்த நிபந்தனையின் பிரிவு 3 இன் பிரகாரம் மிகை வேலைக்காக ஒப்பந்ததாரரினால் மாவட்ட செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாது ரூபா 2,760,764 பெறுமதியான மிகை வேலைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

- பேருந்து நிலையத்தில் 14 மின் விசிறிகள் மாத்திரமே பொருத்தப்பட்டிருந்தும் 16 மின் விசிறிகள் பொருத்தப்பட்டதாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டடிருந்தது.

- பேருந்து நிலைய சுற்றுமதில் 70 மீற்றர் சுற்றளவுக்கு அமைக்கப்பட்டிருந்தும் மாவட்டச் செயலகத்தினால் 73 மீற்றர் சுற்றளவுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் ரூபா 19,800 தொகை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- பேருந்து நிலையத்தின் பின் அத்திவாரத்திற்கு சீமெந்துப் பூச்சு இடப்படாமலும் மண் நிரப்பப்படாமலும் காணப்பட்ட போதிலும் அவற்றிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- அமைவிடத்திற்குப் பொருத்தமாக குறித்த உயரத்தில் பேருந்து நிலையம் நிர்மாணிக்கப்படாமையால் மழை காலங்களில் பேருந்து நிலையம் மழை நீரினால் நிரம்பிக் காணப்படுகிறது. எனவே மழை காலங்களில் பொது மக்களால் இதனைப் பயன்படுத்த முடியாதுள்ளது.

(ஆ) உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தைச் சுற்றியுள்ள அகழியினை அழகுபடுத்துவதற்காக மாவட்டச் செயலகத்தினால் ரூபா 3,611,385 தொகைக்கு 2014 திசெம்பர் 19 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டு குறிப்பிட்ட வேலைகள் 2015 யூலை 31 ஆந் திகதி பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. இவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- கணிய அளவுச் சிட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள கணியங்களுக்கு மேலதிகமாக ஏதாவது வேலை செய்ய வேண்டி ஏற்படின் கட்டிட திணைக்கள பிரதம பொறியியலாளரின் முன் அனுமதியினைப் பெறவேண்டுமென அவரினால் அனுப்பப்பட்ட 2015 ஜனவரி 01 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் அவரின் அனுமதியின்றி ஒப்பந்தக்காரரினால் ரூபா 1,930,012 பெறுமதியான 11 வேலைகள் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதனைப் பொருட்படுத்தாது மாவட்டச் செயலகத்தினால் அவற்றிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- அகழியின் சேற்றுப் பகுதிக்கு மண் நிரப்புவதற்கு கட்டிட திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் படி ஒரு கன அடிக்கு ரூபா 1,472 ஆக நிர்ணயிக்கப்பட்ட போதிலும் ஒப்பந்ததாரருக்கு ஒரு கன அடிக்கு ரூபா 5,000 வீதம் 155.20 கன அடிக்கு ரூபா 751,250 செலுத்தப்பட்டிருந்தது.

- அகழியை அழகுபடுத்தும் வேலையினை ஆரம்பிப்பதற்கு முன் சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு சரியான மதிப்பீட்டினைத் தயாரிக்காததன் காரணத்தினால் மதிப்பீட்டில் உள்ள 46 வேலைகளில் 23 வேலைகளை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக மேலதிகமாக 11 வேலைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதனால் தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

(இ) உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் நூறு நாள் விஷேட அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தியவட்டுவான் மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்ட பகுதியை அழகுபடுத்துவதற்காக மாவட்டச் செயலகத்தினால் ரூபா 2,434,445 பெறுமதிக்கு 2015 யூலை 15 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றி உருக்கு குழாய்களினால் அமைக்கப்பட்ட வேலியானது 224.2 மீற்றர் சுற்றளவுக்கு மாத்திரமே அமைக்கப்பட்டிருந்த போதும் மாவட்டச் செயலகத்தினால் ஒப்பந்ததாரருக்கு 235 மீற்றர் சுற்றளவிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் மேலதிகமாக ரூபா 21,600 தொகை ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

- மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்ட பகுதியில் 150 மில்லி மீற்றர் ஆழத்தில் இரண்டு சிறிய நீர்த்தடாகங்கள் ரூபா 300,000 பெறுமதியில் அமைக்கப்பட்டிருந்தும் இத் தடாகங்கள்

பராமரிப்பற்ற நிலையில் காணப்படுவதால் இதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் ஒரு பயனற்ற செலவினமாக காணப்படுகின்றது.

(ஈ) வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சின் நூறு நாள் விஷேட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஓட்டமாவடி மீனவர் இறங்குதுறையில் தடுப்புச்சுவரை நிர்மாணிப்பதற்காக மாவட்டச் செயலகத்தினால் 2015 யூலை 13 ஆம் திகதி ரூபா 3,000,000 பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2015 நவம்பர் 26 ஆந் திகதி வேலை பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இக்குறிப்பிட்ட நிர்மாண வேலை தொடர்பாக 2016 பெப்ரவரி 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனை மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் 177.49 கியூப் மீற்றர் இயந்திர வேலைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 231.90 கியூப் மீற்றர் இயந்திர வேலைகளிற்கு ரூபா 2,552,234 தொகை செலுத்தப்பட்டிருந்ததனால் ரூபா 383,046 தொகை மாவட்டச் செயலகத்தினால் மேலதிகமாக ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் கண்டறியப்பட்டன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் திவிநெகும தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மஜ்மா நகரில் 09 விவசாயக் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 2,000,000 நிதியேற்பாட்டில் ஒப்பந்தம் வழங்கப்பட்டு குறித்த நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்படாமல் காணப்படுகின்ற போதிலும், இந்த நிர்மாண வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரால் சிபாரிசு செய்யப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,926,851 பெறுமதிக்கு காசோலை வரையப்பட்டிருந்தது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கிழக்கின் உதயம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட மஜ்மா நகர் கிராமத்திற்கு 47 சூரிய மின்கலங்களை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டு நிதியேற்பாடு வழங்கப்பட்டு 2014 திசெம்பர் 10 ஆந் திகதி ரூபா 445,900 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த 47 சூரிய மின்கலங்களும் 2015 ஏப்ரல் 17 ஆம் திகதியே கிடைக்கப்பெற்றிருந்தன.

(இ) வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சின் 2015 ஆம் ஆண்டுக்கான நிதியேற்பாட்டின் கீழ் ஓட்டமாவடி பாலர் பாடசாலையின் கட்டிட நிர்மாணத்திற்காக கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்திற்கு ரூபா 500,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட போதிலும் இக் குறிப்பிட்ட வேலையானது கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டமை குறித்த உதவித் திட்டமிடல் பணிப்பாளரினால் மற்றும் மேற் குறிப்பிட்ட வேலை வழங்கப்பட்ட ஒப்பந்தச் சங்கத்தினால் எழுத்தில் அளிக்கப்பட்ட வாக்குமூலத்திலிருந்து உறுதிப்படுத்தப்பட்டதுடன் இவற்றுக்கான கொடுப்பனவுகளும் முறையற்ற விதத்தில் அவரினால் சிபாரிசு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.9 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் கண்டறியப்பட்டன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ‘‘திவிநெகும’’ தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உபகரணங்கள் மற்றும்

கால்நடைகளை வழங்குவதற்காக 2011 ஆம் ஆண்டின் போது கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 288,222 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட வாழ்வாதார உதவி பொருட்கள் உரிய நலனாளிகளுக்கு வழங்கப்படாமல் திவிநெகும உத்தியோகத்தர்களால் கையாடல் செய்யப்பட்டிருந்தமை குறித்த நலனாளிகள் மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்களால் எழுத்துமூலம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்திலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரு நலனாளிகளுக்கு பசுமை வீட்டுத்திட்டத்தை அமைப்பதற்காக 2012 ஆம் ஆண்டு கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 160,000 நிதி ஏற்பாடுகளிலிருந்து 02 நலனாளிகளுக்கு வரையப்பட்ட ரூபா 155,550 பெறுமதியான 06 காசோலைகள் உரிய நலனாளிகளுக்கு வழங்கப்படாமல் திவிநெகும உத்தியோகத்தர்களினால் மோசடியான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல வாய்மொழி மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வு பரசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களிற்கு அமைய 2016 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தொகை 1,094 ஆக உள்ள போதும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களைப் பாதுகாக்கும் பொருட்டு ரூபா 13,752,184 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த காப்பகம் இற்றைவரைக்கும் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெண்கள் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டில் மட்டக்களப்பு கள்ளியங்காடு பகுதியில் ரூபா 9,588,068 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2014 இல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த சிறுவர் பராமரிப்பு நிலையம் இற்றை வரைக்கும் உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 1991 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையிலும் 13 பிரதேச செயலகங்களிற்கு அதிமேதகு சனாதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட 1,139 சுவர்ண பூமி, ஜய பூமி மற்றும் ஏனைய நன்கொடை உறுதிகளை உரிய நலனாளிகளுக்கு வழங்குவதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2009 ஆம் ஆண்டிலிருந்து சட்ட விரோதமாக அரச காணிகளில் நிறுவப்பட்ட 27 தொலைத் தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகத்தினால் உரிய நிறுவனங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கோரளைப்பற்று மத்தி மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலகங்களினால் நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் இரண்டு தனியார் நிறுவனங்களிற்கு காணிகள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், குறித்த தனியார் நிறுவனங்களிடமிருந்து வட்டமும் குத்தகையுமாக ரூபா 3,830,000 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 மார்ச் 10 ஆந் திகதிய 03/2014/(I) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மாவட்டச் செயலகத்தின் 03 உத்தியோகத்தர்களால் அங்கீகரிக்கப்பட்ட தொலைபேசிச் செலவின எல்லைகளை மீறி தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டிருந்த

போதிலும், மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 31,588 தொலைபேசிக் கட்டணங்கள் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 50 | 49 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 44 | 11 | 33 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 919 | 797 | 122 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 143 | 126 | 17 | - |
| (v) | ஏனையோர் (தற்காலிகம்) | - | 05 | - | 05 |
| | மொத்தம் | 1156 | 988 | 173 | 05 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகை பதவியணியினர் தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.